**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா, B.A., B.L., (Hons)**

**முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.**

**திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 08 ம் நாள்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.137/2026**

**CNR.No. TNKR03-0010118-2026**

R. ராமசாமி ...வாதி

**//எதிர்//**

சுகுமார் (எ) சுகுமாரன் ...பிரதிவாதி

இந்த வழக்கு கடந்த 11.06.2026 அன்று இறுதியாக என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.வெங்கடேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பிரதீப் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வாதியின் வழக்கை ஒப்புக்கொண்டு ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்ப்புரை**

இவ்வழக்கில், வாதி கடந்த 06.12.2025 தேதியிட்ட தாவா கிரைய ஒப்பந்த பத்திரம்படி ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம்கோரி இவ்வழக்கு தாக்கல்.

**2) அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்**

தாவா சொத்துக்கள் பிரதிவாதிக்கு 12.01.1996 ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், கடந்த 06.12.2025 ம் தேதி வாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு பிரதிவாதி ஒப்புக்கொண்டு விற்பனை தொகையாக ரூ.7,20,000/- என்று பேசப்பட்டது என்றும், மேற்படி தேதியில் முன்தொகையாக ரூ. 2,20,000/- வாதியிடமிருந்து பெறப்பட்டது என்றும், மீதி

தொகையை செலுத்துவதற்கு 45 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டது என்றும், கிரய ஒப்பந்த தேதியிலிருந்து வாதி கிரயம் செய்து கொள்ள எப்போதும் தயாராகவும், முழு விருப்பத்துடன் இருந்த நிலையில், பிரதிவாதி கிரய ஆவணம் எழுதிக்கொடுக்க மறுத்ததால் வாதி கடந்த 24.01.2026ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதை பிரதிவாதி 28.01.2026ம் தேதி பெற்றுக்கொண்டும் கிரயம் பதிந்து கொடுக்க முன்வராததால் இந்த வழக்கு தாக்கல்.

**3)** பிரதிவாதி தரப்பில் கடந்த 11.06.2026ம் தேதி தாவா கிரய ஒப்பந்தப்படி பாக்கி கிரய தொகை ரூ. 5,00,000/- பிரதிவாதி பெற்றுக்கொண்டுவிட்டார் என்றும், வாதிக்கு ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் வழங்குவதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், கிரய பத்திரம் எழுதிக்கொடுக்க 30 நாட்கள் கால அவசாசம் வேண்டுமென்றும், ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார்.

4)தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒப்புதல் மனுவில் ஏற்றுக்கொண்டு வாதி கோரியுள்ளபடி தாவா சொத்தை பொறுத்து ஏற்றுதல் ஆற்றுக பரிகாரம் வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தாக அமையும் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6) முடிவாக, வாதியின் தாவாவை அனுமதித்து 06.12.2025 தேதியிட்ட கிரய ஒப்பந்ததின்படி பிரதிவாதி, வாதிக்கு கிரய ஆவணத்தை ஒரு மாத காலத்திற்குள் பதிந்து கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் வாதி நீதிமன்றம் மூலம் உரிய பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம்

ஆண்டு ஜுன் திங்கள் 22ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**

**வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**